


24. 02. 2026

## தலைப்புச் செய்திகள்

- கலாச்சாரங்களின் பாலமாகவும், பொருளாதார வாய்ப்புகளின் முன்னோடியாகவும் சுற்றுலா திகழ்கிறது என்று குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.
- தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்கள் இடையே ஒருங்கிணைப்பின் அவசியத்தை தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் வலியுறுத்தியுள்ளார்.
- 3. கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நினைவு வளைவை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.
- அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபாய் கருணை தொகை வழங்கப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.
- துபாய் டென்னிஸ் சேம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஸ்ரீராம்

பாலாஜி, ஆஸ்திரியாவின் நீல் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

***************

குடியரசு துணை தலைவர்

கலாச்சாரங்களின் பாலமாகவும், பொருளாதார வாய்ப்புகளின் முன்னோடியாகவும் சுற்றுலா திகழ்கிறது என்று குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்தியா அமெரிக்கா சுற்றுலா பங்களிப்பு உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், தூதரக உறவுகளை வலுப்படுத்துவதற்கான கருவியாக சுற்றுலா திகழ்கிறது என்றார்.

இன்றைய கால கட்டத்தில் புதிய அனுபவங்கள், நிலைதன்மை, நம்பகதன்மை, கலாச்சாரம், பாரம்பரியம், நலன்கள் அர்த்தமுள்ள தொடர்புகளை சுற்றுலா பயணிகள் விரும்புவதாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரம் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் கலாச்சாரத்தின் கொண்டாட்டங்களாக சுற்றுலா திகழ்கிறது என்றார்.

உலகளாவிய பொருளாதார நாடாக இந்தியா முன்னேறிவரும் இத்தருணத்தில் சுற்றுலா வளர்ச்சியின் மையமாக திகழ்கிறது என்று கூறினார்.

நகர்புற மற்றும் ஊரக பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு சுற்றுலா முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அமெரிக்காவிலிருந்து சென்ற ஆண்டு 18 லட்சம் சுற்றுலா பயணிகள் இந்தியாவிற்கு வருகை தந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

***************

ஜெயலலிதாவின் பிறந்த தினம்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தமது சமூகவலைதள பதிவில் தமிழக அரசியலில் நீங்கா இடம்பெற்றுள்ள ஜெயலலிதா ஏழைகளின் வாழ்வாதாரம், மகளிரின் ஆளுமை உள்ளடக்கிய வளர்ச்சியில் எண்ணற்ற திட்டங்களை திறம்பட செயலாற்றியதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது செய்தியில் தலைசிறந்த நிர்வாகியாக மக்களின் இதயங்களில் இடம்பிடித்தவர் என்று புகழஞ்சலி செலுத்தினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் தமிழகத்தின் வளர்ச்சிக்கும், சமூக நல திட்ட மேம்பாட்டிற்கும் அர்பணிப்புடன் செயலாற்றியவர் ஜெயலலிதா என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை காமராஜர் சாலையில் உள்ள ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு மாநில அரசின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அஇஅதிமுக தலைமையகத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி ஜெயலலிதாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

***************

முருகன்

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மத்திய அரசின் நலத்திட்டங்களுக்கான ஒருங்கிணைந்த சேவை முகாமையை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர், அனைத்து தரப்பு மக்களின் நலனுக்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்துவதாக எடுத்துரைத்தார்.

இன்று தொடங்கிய இந்த இரண்டு நாள் முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

***************

ஞானேஷ்குமார்

ஜனநாயகத்தின் இன்றியமையா அடித்தளமாக முறையான வாக்காளர்கள் பட்டியல் திகழ்கிறது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு.ஞானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மாநில தேர்தல் ஆணையர்களின் தேசிய ஆலோசனை கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், வாக்காளர் பட்டியலில் தகுதியுடையவர்களை இணைப்பதும், தகுதியற்றவர்களை நீக்கவும் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக எடுத்துரைத்தார்.

பீஹாரில் தொடங்கிய வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை தொடர்ந்து 12 மாநிலங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதில் 11 மாநிலங்களின் இறுதிவாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இதனிடையே தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ள திரு.ஞியானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் குழுவினர் நாளை சென்னை வருகின்றனர்.

வரும் 26, 27 தேதிகளில் சென்னையில் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் அரசியல் கட்சி தலைவர்களுடன் இக்குழுவினர் ஆலோசனைகளை மேற்கொள்கின்றனர்.

முன்னதாக புதுச்சேரியில் தேர்தல் நடைமுறைகள் குறித்து இக்குழு ஆய்வு மேற்கொள்கிறது.

***************

நித்திஆயோக்

நாட்டில் வரும் ஐந்து முதல் 10 ஆண்டுகளில் மத்திய அரசின் தேசிய நிதிமய திட்டத்தின் இரண்டாவது கட்ட பணிகள், 40 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி தற்போதுள்ள பொது சொத்துக்களை புதிய கட்டமைப்பு திட்டங்களில் முதலிடு செய்வதன் மூலம் கட்டமைப்பு துறையும் பொருளாதாரமும் வளர்ச்சி பெறும் என்றும் நித்தி ஆயோக் கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டுமுதல் 2030ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்படும் சொத்துக்களை நிதிமயமாக்கும் மத்திய அரசின் இரண்டாவது கட்ட திட்டத்தின் கீழ் 40 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கப்பெறும் என்றும் நித்தி ஆயோக் கூறியுள்ளது.

வரும் ஐந்தாண்டுகளில் 12 பிரிவுகளின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுத்து 16 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாய் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நித்தி ஆயோக்கின் அறிக்கை மேலும் கூறுகிறது.

***************

முதலமைச்சர்

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நினைவு வளைவை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

நாகர்கோவிலில் 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட தியாகி பொன்னப்பநாடாரின் திருவுருவ சிலையை இன்றுமாலை அவர் திறந்துவைக்கிறார்.

நாளை நடைபெறும் விழாவில் பயனாளிகளுக்கு அரசின் நல திட்ட உதவிகளை வழங்கி வளர்ச்சி திட்ட பணிகளை முதலமைச்சர் தொடங்கிவைக்கிறார்.

***************

உதயநிதி

பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த ஐந்தாண்டுகளில் திருக்கோவில்களுக்கு சொந்தமான 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

38 மாவட்டங்களிலும் மாதிரி பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

***************

எடப்பாடி – தேர்தல் அறிக்கை

தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபாய் கருணை தொகை வழங்கப்படும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

சென்னையில் 3ஆவது கட்ட தேர்தல் அறிவிப்புகளை இன்று வெளியிட்டு பேசிய அவர், வேலை இல்லா பட்டதாரிகளுக்கான உதவிதொகை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்,

மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்,

பொங்கல் தொகுப்புடன் ஆண்டுதோறும், ஆயிரம் ரூபாய் ரொக்கம் வழங்கப்படும்,

கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தின் யூனிட் பயன்பாடு அதிகரிக்கப்படும்,

சிறு வியாபாரிகளின் கூட்டுறவு வங்கி கடன் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

***************

ஆட்சித்தலைவர்கள் - மாற்றம்

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உட்பட 8 ஐ.ஏ.எஸ்.அதிகாரிகளை பணியிடமாற்றம் செய்து தமிழக அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி கரூர் மாவட்ட ஆட்சித்தலைவராக திரு.ரவிக்குமார்,

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவராக திருமதி ஸ்னேகா,

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவராக திருமதி மாலதி ஹெலன் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

***************

ஈரநிலம்

குற்றாலத்தில் ஈர நில பாதுகாப்பு கருத்தரங்கம் இன்று நடைபெற்றதாக எமது தென்காசி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

தர்மபுரி

தர்மபுரி மாவட்ட சிறுதானிய விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் வழங்கும் என ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் கூறியுள்ளார்.

வாய்ஸ்

***************

இருவரி

கடலூர் மாவட்டத்தில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா இன்று தொடங்கிவைத்தார்.

விழிப்புணர்வு உறுதி மொழியை மாணாக்கர் ஏற்றுக்கொண்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் இணையதள குற்றங்களில் ஈடுபட்ட 5 பேரை குற்ற புலனாய்வு பிரிவு காவல்துறையினர் கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டத்தில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு முதல்முறை வாக்காளர்களுக்கு ஏற்படுத்தப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் சூர்ய சக்தி தொழில்முனைவோர் இலவச திறன் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் 13ஆம் தேதி தொடங்கும் என்று ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சி நாமக்கல் மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ஆம் தேதி நடைபெறுகிறது.

***************

டென்னிஸ்

துபாய் டென்னிஸ் சேம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ஆஸ்திரியாவின் நீல் இணை – இத்தாலி இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் யூக்கி பாம்ப்ரி – ஸ்வீடனின் ஆன்ட்ரூ இணை களமிறங்குகிறது.

***************

கிரிக்கெட்

பிரிஸ்பேனில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 215 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும், ஆஸ்திரேலியா சற்றுமுன் 9 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 49 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக இந்தியா 48.3 ஓவரில் 214 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது